45. தமிழில் வடமொழிக் கலப்பு - கல்வெட்டுகள், செப்பேடுகள் வழி அறியும் உண்மைகள்.

ந. தட்சணாமூர்த்தி *M.A (தமிழ்),*
அஞ்சல்துறை கணக்கு அதிகாரி (ஓய்வு),
பட்டுக்கோட்டை – 614602
மின்னஞ்சல்: ndmoorthy30@gmail.com

முன்னுரை:

இன்று உலகில் பேசப்படும் மொழிகளுள் நமது தமிழ் மிகவும் தொன்மையான ஒரு மொழி. பழங்காலத்தில் பாரதத்தின் தென்பகுதியில் தமிழும், வடபகுதியில் சமஸ்கிருதமும் சிறந்திருந்தன. சமஸ்கிருதத்தை வடமொழி என்று கூறுவது மரபு. தமிழ் மொழியில் காலந்தோறும் வடமொழிக் கலப்பு ஏற்பட்டுள்ளது என்பது நன்கறியப்பட்ட ஒன்று. தொல்காப்பியத்தில் தொடங்கி தமிழ் இலக்கியங்களில் வடமொழிக்கலப்பு ஏற்பட்டதைப் பற்றி அறிஞர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர். இலக்கியம் என்பது மக்களிடம் வழங்கும் பொதுமொழியில் இருந்து வேறுபட்டது. தனக்கெனத் தனித்த இலக்கணங்களையும், மரபையும் கொண்டது. மக்கள் பேசி, எழுதி வரும் பொதுமொழி என்பது இயற்கையாய் அமைந்தது. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவை இலக்கியம் போல் அல்லாமல் மக்களின் பொதுமொழியை அடிப்படையாகக் கொண்டவை. தமிழகத்தில் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் தொடங்கி காலந்தோறும் எழுதப்பட்ட கல்வெட்டுகள் கிடைக்கின்றன. செப்பேடுகள் சங்க காலத்திலேயே இருந்திருக்க வேண்டும் என்பதை பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி வேள்விக்குடியைக் கொடையளித்த செய்தியில் இருந்து உணர முடிகிறது. எனினும் பிற்காலச் செப்பேடுகளே கிடைத்துள்ளன. கல்வெட்டுகள், செப்பேடுகள் மூலம் மக்களின் பொதுமொழியில் வடமொழிக்கலப்பு ஏற்பட்டிருந்த நிலையை வரலாற்று நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். கல்வெட்டுகள், செப்பேடுகள் மிகப்பலவாக உள்ளதால் சில மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்:

தமிழுக்கும் வடமொழிக்கும் மிகப்பழங்காலம் முதல் எழுத்துமுறை இருந்திருக்க வேண்டும். ஆனால் பிராமி எழுத்துமுறைக்கு முந்தைய திட்டவட்டமான எழுத்துமுறை எதுவும் இதுவரைக் கண்டறியப்படவில்லை. பிராமி எழுத்துமுறை

என்பது கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகரால் வெட்டப்பட்ட பாறைக் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துமுறையாகும். இந்தியாவிலும், இலங்கையிலும் இன்று உள்ள எல்லா எழுத்துமுறைகளும், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள பல எழுத்துமுறைகளும் இந்த பிராமி எழுத்துமுறையில் இருந்து வந்தனவே என்பது அறிஞர்கள் முடிவு. பிராமியில் உள்ள வடமொழிக்குரிய எழுத்துகளை விடுத்து தமிழுக்கே உரிய எழுத்துகளுக்குக் குறியீடுகளைச் சேர்த்து பழந்தமிழகத்தில் தமிழ் எழுதப்பட்டது. இந்த எழுத்துமுறையைத் தமிழ்பிராமி அல்லது தமிழி என்பர்.

தமிழ்பிராமி எழுத்துகளின் வடிவங்கள் காலப்போக்கில் மாற்றம் அடைந்தன. தமிழகத்தின் வடபகுதியில் ஒரு வகையாகவும் தென்பகுதியில் ஒருவகையாகவும் அவை மாற்றம் பெற்றன. தென்பகுதி எழுத்து 'வட்டெழுத்து' எனப்படும். வடபகுதி எழுத்தில் இருந்தே இன்றைய தமிழ் எழுத்து வளர்ந்து வந்துள்ளதால் அதைத் 'தமிழ் எழுத்து' என்று கல்வெட்டியலார் குறிப்பிடுவர். பாண்டிய நாட்டு வட்டெழுத்தே சேரநாட்டிலும் பயன்படுத்தப்பட்டது. வடமொழியை எழுத பல்லவர்களால் பயன்படுத்தப்பட்ட பிராமி காலப்போக்கில் திரிந்து, 'கிரந்த எழுத்து' என்னும் பெயர் பெற்றது. பல்லவர் மட்டுமின்றி தென்னிந்தியாவின் வேறு சில பகுதிகளிலும் வடமொழியை எழுத இந்த கிரந்த எழுத்தைப் பயன்படுத்தினர். வட இந்தியாவில் சமஸ்கிருதத்தை எழுத தேவநாகரி முதலிய எழுத்துகள் பயன்பட்டன. வட்டெழுத்து நிலவிய பாண்டிய நாட்டைச் சோழர்கள் கைப்பற்றியபின் அங்கு வடபகுதித் தமிழ் எழுத்தை நிலைநாட்டினர். பின் அங்கு வட்டெழுத்து மறைந்துவிட்டது. கேரளாவில் இருந்த வட்டெழுத்து கி.பி. 17 ஆம் நூற்றாண்டு அளவில் புதிய மலையாள எழுத்து வரும்வரை அங்கு நீடித்தது.

தமிழ்பிராமிக் கல்வெட்டுகள்:

பழைமையான தமிழகக் கல்வெட்டுகள் தமிழ்பிராமி எழுத்தில் உள்ளன. அவை ஏறத்தாழ கி.மு. 3 முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைச் சேர்ந்தன என்பர். தமிழ் மொழியில் அவை எழுதப்பட்டுள்ளன. எனினும் அவற்றில் சமஸ்கிருதச் சொற்களும், சமஸ்கிருதத்தின் திரிபு மொழியான பிராகிருதத்தின் சொற்களும், பெயர்களும் பல கலந்துள்ளன. அதிட்டானம், ஸாலகன், கணி, தம்மம், நிகமம், உதயனஸ முதலிய சொற்களும் காயிபன், வெண்காஸிபன், அஸுதன், நந்தஸிரி, ஸுதன், சந்திரநந்தி, கணதேவன், வெஸன், ஸபமிதா முதலிய ஆள்பெயர்களும் காணப்படுகின்றன[1]. தமிழில் இல்லாத எழுத்துகள் கொண்ட சொற்களை எழுதும்போது தமிழ்பிராமியில் இல்லாத பிராமி எழுத்துகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஸ, ஸா, ஸி, ஸு முதலிய ஒலிகள் அவற்றுக்குரிய பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன[2]. இந்தக் கல்வெட்டுகளில் பெரும்பாலானவை சமண முனிவர்களின் குகைகளில் காணப்படுபவை. அவை திருத்தமற்ற பேச்சுத்தமிழிலும், செந்தமிழில் இருந்து மாறுபட்டும் உள்ளன.

பல்லவர் கல்வெட்டுகள்:

பல்லவர் கல்வெட்டுகள் தமிழ்பிராமிக்குப் பிந்தைய கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டவை. திண்டிவனம் வட்டம் தளவானூரில் மகேந்திரவர்ம பல்லவன் அமைத்த குடைவரைக் கோவிலில் அவனது கல்வெட்டு உள்ளது[3]. கி.பி 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அக்கல்வெட்டில் முதலில் சமஸ்கிருதத்திலும் அடுத்து தமிழிலும் கோவில் அமைத்த செய்தி கூறப்பட்டுள்ளது. சமஸ்கிருதப் பகுதி கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. தமிழ்ப்பகுதியிலும் இடையிடையே வடமொழிக்குரிய ஒலிகள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோவிலில் கருவறைக்கு அருகே இரண்டாம் நந்திவர்ம பல்லவனால் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது[4]. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு தமிழில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதில் பல சமஸ்கிருதச் சொற்கள் உள்ளன. அவை யாவும் தமிழ் எழுத்தில் அல்லாமல் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

பாண்டியர் கல்வெட்டுகள்:

மதுரையில் வைகைக்கரையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு பாண்டியன் சேந்தன் அரிகேசரி, மதகு அமைத்ததைப் பற்றிக் கூறுகிறது[5]. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில் பல வடசொற்கள் உள்ளன. அவை அனைத்தும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

திருநெல்வேலி கழுகுமலையில் வெட்டப்பட்டுள்ள 8 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று பாண்டியன் மாறன்சடையனின் ஆட்சியில் எழுதப்பட்டது[6]. இது திருமாலடைஞ்சு என்ற குன்றில் தங்கி சித்தாந்தம் உரைக்கும் ஞானசாகர பிடாரர் உள்ளிட்ட பதின்மர் வைராகியர்க்கு (மாணவத் துறவிகளுக்கு?) தர்மவித்தன் என்பவன் உணவுக்காகச் செய்த கொடை பற்றிக் கூறுகிறது. இதில் உள்ள வடசொற்களில் 'சித்தாந்தம்' (ஸித்ீயநீதஜீ) போன்றவை முழுமையாக கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. தர்மவித்தனும் என்பதில் 'தர்மவித்த' (ரீஷவிதீத) என்பது கிரந்த எழுத்திலும் 'னும்' என்பது தமிழ் எழுத்திலும் எழுதப்பட்டுள்ளது. வயிராக்யர்கு என்பதில் 'க்ய' (ஸீய) என்பது கிரந்த எழுத்திலும் மற்றவை தமிழ் எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன. அதாவது தற்காலத்தில், 'ரோஜா' என்பதில் தமிழில் இல்லாத ஒலியான 'ஜா' என்பதை கிரந்த எழுத்திலும் தமிழில் உள்ள ஒலியான 'ரோ' என்பதைத் தமிழ் எழுத்திலும் எழுதுவது போல அக்காலத்தில் இது போலச் சில இடங்களில் வடமொழிக்குரிய ஒலிகள் மட்டும் வடமொழி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. தற்காலத்தில் ஷ, ஸ, ஜ, ஹ, க்ஷ, ஸ்ரீ என்ற ஆறு கிரந்த எழுத்துகளை மட்டுமே இவ்வாறு எழுதுகிறோம். ஆனால் அக்காலத்தில் வடமொழிக்கே உரிய எல்லா எழுத்துகளும் வடமொழி எழுத்துகளால் எழுதப்பட்டன.

எடுத்துக்காட்டாக, 'கோபுரம்' என்ற சொல்லில் உள்ள 'கோ' (go) என்ற எழுத்து கிரந்த எழுத்திலும் மற்றவை தமிழ் எழுத்திலும் இவ்வாறு எழுதப்படும்: 'ஹொபுரம்'.

மதுரை ஆனைமலையில் உள்ள பாண்டியன் மாறன்சடையன் காலக் கல்வெட்டு ஒன்று சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது[7]. பாண்டியனின் அமைச்சனும் மருத்துவனும் ஆன மதுரகவி என்ற மாறன்காரி ஒரு கோவிலைக் கட்டினான். பிராமணர்க்கு அக்ரகாரத்தைக் கொடையாக அளித்தான். கோயில் வேலை முடிவதற்குள் அவன் இறந்துவிட்டான். புதிய அமைச்சனாகப் பதவியேற்ற அவன் மகன் கோயிலைக் கட்டி முடித்தான். கலியாண்டு 3871 ல் (கி.பி.770) கோயில் கட்டி முடிக்கப்பட்டது. இந்தச் செய்திகளில் சில வடமொழிப் பகுதியிலும் சில தமிழ்ப்பகுதியிலும் கூறப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதியில் உள்ள வடமொழிச்சொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

சுந்தர பாண்டியனின் ஸ்ரீரங்கம் தமிழ்க் கல்வெட்டு[8] ஒன்றில் (கி.பி. 1261) முதலில் ஒரு சமஸ்கிருத சுலோகம் இடம் பெற்றுள்ளது.

பரக்கிரம பாண்டியனின் காலம் பிற்காலமான 15 ஆம் நூற்றாண்டு ஆகும். குற்றாலம் கோவிலில் காணப்படும் அவனது கல்வெட்டிலும்[9] இவ்வாறே வடமொழிச் சொற்களை கிரந்த எழுத்தில் எழுதுவதும் தமிழில் எழுதப்படும் சொற்களின் இடையே வடமொழி ஒலிகளை கிரந்த எழுத்தில் எழுதுவதும் காணப்படுகின்றன. இதன்மூலம் வரலாறு நெடுகிலும் இப்போக்கே பின்பற்றப்பட்டது என்பதை அறிகிறோம்.

சோழர் கல்வெட்டுகள்:

வாலாஜாபேட்டை வட்டம் விளாப்பாக்கத்தில் உள்ள ஒரு கோவிலில் உள்ள ஒரு கல்வெட்டு சோழன் பராந்தகனின் ஆட்சியில் கி.பி. 945ல் வெட்டப்பட்டது[10]. இக்கல்வெட்டு அரிஷ்டநேமி பிடாரர் என்பவரின் மாணாக்கி பட்டினிக்குரத்தி என்பவள் ஒரு கிணறு வெட்டி, கிணற்றையும் மனைநிலத்தையும் பெண் பள்ளி (பெண் சமணத் துறவிகள் பள்ளி?) அமைக்கக் கொடையாகக் கொடுத்ததைக் கூறுகிறது. இக்கல்வெட்டில் கிரந்த எழுத்துகள் வடமொழிக்குரிய சொற்களுக்கு நடுவிலும் முழுச்சொற்களிலும் காணப்படுகின்றன.

சுசீந்திரம் தாணுநாத ஆலயத்தில் பராந்தக சோழன், முதலாம் இராஜராஜன் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் வெட்டப்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன[11]. இவை கோயிலுக்குக் கொடை கொடுத்ததைப் பற்றிக் கூறுகின்றன. இக்கல்வெட்டுகளிலும் கிரந்த எழுத்துகள் வடமொழிக்குரிய சொற்களுக்கு நடுவிலும் முழுச்சொற்களிலும் காணப்படுகின்றன.

வேலூர் வட்டம் மேல்பாடியில் உள்ள சோழேஸ்வர ஆலயத்தில் முதலாம் இராஜராஜன் ஆட்சியில் வெட்டப்பட்ட நான்கு கல்வெட்டுகள் (கி.பி 1014)

காணப்படுகின்றன[12]. இக்கோவில் தன் பாட்டன் ஆற்றூர்த் துஞ்சிய தேவனுக்குப் பள்ளிப்படையாக, இராஜராஜன் கட்டிய மகாதேவர் கோவில் ஆகும். இக்கோவிலுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகளைப் பற்றி நான்கு கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகளில் பல வடசொற்கள் முழுவதுமோ அல்லது சில எழுத்துகள் மட்டுமோ கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

கன்னியாக்குமரியில் உள்ள குமரியம்மன் கோவிலில் உள்ள ஆறு தூண்களில் சோழன் வீரராஜேந்திரனின் கல்வெட்டு (கி.பி. 1070) உள்ளது[13]. இது அவன் குமரியம்மனுக்கு நிலங்கள் கொடை அளித்தது பற்றிக் கூறுகிறது. பொதுவாக, செப்பேடுகளில் சமஸ்கிருதப் பகுதியும் பின்பு தமிழ்ப்பகுதியும் என இரு பகுதிகள் இருக்கும். சமஸ்கிருதப் பகுதியில் மன்னனின் முன்னோர் பற்றிய புகழ்மொழிகள் புராண நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் விரிவாகக் கூறப்படும். தமிழ்ப் பகுதியில் கொடை பற்றிய செய்தி கூறப்படும். கல்வெட்டுகளில், பொதுவாக, சமஸ்கிருதப் பகுதி இருக்காது; தமிழ்ப் பகுதி மட்டுமே இருக்கும். ஆனால் இந்தக் கல்வெட்டானது செப்பேடு போலவே சமஸ்கிருதப் பகுதியும் கொண்டது. இந்த சமஸ்கிருதப் பகுதி 81 சுலோகங்கள் (பாடல்கள்) கொண்டு 419 வரிகளில் அமைந்துள்ளது. சோழர் குல வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சோழன் வீரராஜேந்திரனின் சோழமாதேவிக் கல்வெட்டி[14] (கி.பி.1063-70) தொடக்கத்தில் ஒரு சமஸ்கிருத சுலோகம் காணப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் திருபுவனக் கல்வெட்டு ஒன்று[15] (கி.பி.12ஆம் நூற்றாண்டு) முழுக்க முழுக்க சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு அவனது பெருமைகள் அதில் கூறப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் வட்டம் ஆர்ப்பாக்கத்தில் உள்ள சோழன் இரண்டாம் இராஜாதிராஜனின் ஒரு கல்வெட்டு[16] (கி.பி. 1171) தமிழில் இருந்தாலும் அதில் மிகப்பல சமஸ்கிருதச் சொற்கள் கிரந்த எழுத்தில் உள்ளதால், இது பொதுமக்கள் படிப்பதற்கு உரியது எனினும் வடமொழி அறியாமல் அதைப் படித்துப் புரிந்து கொள்ள இயலாதபடி உள்ளது.

சேரர் கல்வெட்டுகள்:

முற்காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்த சேர நாடு பிற்காலத்தில் பிரிந்து கேரளா ஆகிவிட்டது. கேரளாவில் கிடைக்கும் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டவை நல்ல தமிழில் இருப்பதைக் காணலாம். பிற்காலத் தமிழ்க் கல்வெட்டுகளில் சேரநாட்டு வட்டார வழக்கு மிகுதியாகக் கலந்து காணப்படுகிறது. பெரும்பாலும் வட்டெழுத்திலேயே இவை எழுதப்பட்டன. வடசொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டன. சேர அரசன் பாஸ்கர ரவிவர்மாவின் ஆட்சியில் பெருநெய்யில் (பெருநெய்தல்) என்ற இடத்தில் உள்ள கோவிலில் கி.பி.1016ல் வெட்டப்பட்ட கல்வெட்டை[17] எடுத்துக்காட்டாகக் கூறலாம். இது கோயிலுக்குத் தானம் கொடுத்ததைப் பற்றிக் கூறுகிறது. இதில் உள்ள வடமொழிச் சொற்கள் கிரந்த

எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. பிற சேரநாட்டுக் கல்வெட்டுகளிலும் இதே நிலையைக் காணலாம்.

கர்நாடக, ஆந்திரத் தமிழ் கல்வெட்டுகள்:

கர்நாடகத்தில் சிரவணபெலகொலாவில் உள்ள பாகுபலி சிலையின் வலப்புறம் மூன்று வரிகள் வெட்டப்பட்டுள்ளன[18]. இது 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. முதல் வரி கன்னடத்தில் 'ஸ்ரீசாமுண்டராஜனால் செய்யப்பட்டது' என்ற பொருள்பட உள்ளது. அடுத்த வரி தமிழில், 'ஸ்ரீசாமுண்டராஜன் செய்வித்தான்' என்று உள்ளது. இதில் 'ஸ்ரீசாமுண்டராஜன்' என்பது கிரந்த எழுத்திலும் 'செய்வித்தான்' என்பது தமிழ் வட்டெழுத்திலும் உள்ளது. கர்நாடகாவில் தமிழ்க் கல்வெட்டுகள் நிறைய உள்ளன. இவற்றிலும் பல சமஸ்கிருதச் சொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வாறே ஆந்திராவிலும் தமிழ்க்கல்வெட்டுகள் நிறைய உள்ளன. இவற்றிலும் பல சமஸ்கிருதச் சொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

இலங்கைக் கல்வெட்டுகள்:

இலங்கையிலும் தமிழ்க் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அங்கு வட்டதகே என்ற பகுதியில் உள்ள ஒரு கல்வெட்டு 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்கள அரசன் விஜயபாகுவின் ஆட்சியில் வெட்டப்பட்டது[19]. அங்குள்ள பௌத்தப்பள்ளியின் பாதுகாப்புப் பொறுப்பை அதன் தலைவரான ராஜகுரு, தமிழ் வணிகர் கூட்டங்களைச் சேர்ந்த திருவேளைக்காரப் படையிடம் ஒப்படைத்தது பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. இத்தமிழ்க் கல்வெட்டில் பல வடசொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இனிச் செப்பேடுகள் பற்றிக் காண்போம்.

பல்லவர் செப்பேடுகள்:

திருத்துறைப்பூண்டி வட்டம் பள்ளன்கோவிலில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடு[20] தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடுகளில் மிகப் பழையது; சிம்மவர்ம பல்லவன் ஆட்சியில் கி.பி 550 ல் எழுதப்பட்டது. நந்திகணம் என்ற சமணத் துறவிகள் சங்கத்தின் தலைவரான வஜ்ரநந்தி என்ற சமண குருவுக்கு அரசன் ஒரு சிற்றூரை தானமாக அளித்தது பற்றி இச்செப்பேடு கூறுகிறது. இச்செப்பேடு இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி சமஸ்கிருதத்திலும் இரண்டாம் பகுதி தமிழிலும் உள்ளது. சமஸ்கிருதப் பகுதியில் உள்ள சுலோகங்களில் மங்கல வாழ்த்து, பல்லவர் வரலாற்றுச் சுருக்கம். கொடையின் விவரம் ஆகியவை கூறப்படுகின்றன. தமிழ்ப் பகுதி கொடையின் விவரத்தைப் பற்றி மட்டும் கூறுகிறது. தமிழ்ப் பகுதியில் உள்ள வடசொற்கள் கிரந்த எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளன. பல்லவர்களின் மற்ற செப்பேடுகளும் இம்முறையிலேயே அமைந்துள்ளன. பொதுவாக, பல்லவர் மட்டுமின்றி பாண்டியர்,

சோழர், சேரர் ஆகிய மன்னர்கள் அனைவரது செப்பேடுகளிலும் இம்முறையே காணப்படுகிறது.

பாண்டியர் செப்பேடுகள்:

பாண்டியர் செப்பேடுகளில் காலத்தால் முற்பட்டது பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேடு[21] (கி.பி.770). மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது இச்செப்பேடு. சங்க காலப் பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியால் நற்கொற்றன் என்ற பிராமணனுக்கு தானமாகக் கொடுக்கப்பட்ட வேள்விக்குடி என்ற ஊரைக் களப்பிரர்கள் பிடிங்கிக் கொண்டதையும், நீண்ட காலத்திற்குப் பிறகு நற்கொற்றன் வழியில் வந்த நற்சிங்கன் என்பவன் மன்னன் நெடுஞ்சடையனிடம் முறையிட, அரசன் அவனது உரிமையை ஆராய்ந்து வேள்விக்குடியைத் திருப்பித் தந்ததைப் பற்றியும் இச்செப்பேடு கூறுகிறது. இச்செப்பேட்டில் சமஸ்கிருதப் பகுதியும் தமிழ்ப் பகுதியும் உள்ளன. சமஸ்கிருதப் பகுதியில் மங்கல வாழ்த்தும், புராண நோக்கில் பாண்டியர் பெருமையும், நெடுஞ்சடையன் முன்னோர் சிலரைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதியில் கடுங்கோன் முதலாக நெடுஞ்சடையன் வரையிலான எல்லா அரசர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பழைய தானத்தைத் திரும்ப அளித்தது பற்றிய முழு விவரங்கள் கூறப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதியின் இறுதியில் அத்தானத்தின் அதிகாரியாகிய ஆனத்தியின் பெயரையும், தானத்தின் சிறப்பையும் கூறும் சமஸ்கிருதச் சுலோகங்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்ப் பகுதியில் 70க்கும் மேற்பட்ட சமஸ்கிருதச் சொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. பரமேச்வர, களப்ர, கங்கராஜ, கந்யாரத்னம், வல்லப, வைத்ய சிகாமணி, ஸபை, பிரசஸ்தி, தாம்ரசாஸன, யுத்தகேஸரி போன்ற தமிழில் எழுதக்கூடிய சொற்களும் வடமொழி ஒலி மாறாமல் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

பாண்டியன் பராந்தகன் வீரநாராயணின் தளவாய்புரச் செப்பேடு[22] (ஏறத்தாழ கி.பி 900) பிராமணர்களுக்கு ஊர்களை தானமாக அளித்தது பற்றிக் கூறுகிறது. இச்செப்பேட்டிலும் இவ்வாறே தமிழ்ப் பகுதியில் 92 வடசொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. சமஸ்கிருதப் பகுதியில் சில தமிழ்ச் சொற்கள் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதி மிகுந்த இலக்கியத் தன்மையுடனும் மிகுந்த சமஸ்கிருதப் புலமையுடனும் எழுதப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதியை இயற்றியவன் தமிழாபரணன் என்ற பெயர் பெற்ற பாண்டிமாராயப் பெருங்கொல்லனான சீவல்லபன் என்பவன். செப்பேட்டில் எழுதியவன் அவன் தந்தையான நிருபசேகரப் பெருங்கொல்லன் எனப்பட்ட நக்கன் என்பவன். பாண்டியரின் மற்ற செப்பேடுகளிலும் இதே போன்ற வடமொழிப் பயன்பாட்டு நிலையைக் காணலாம்.

சோழர் செப்பேடுகள்:

சோழர் செப்பேடுகளில் பழமையானதாகக் கருதப்படுவது முதலாம் பராந்தக சோழனின் உதையேந்திரச் செப்பேடு[23] (கி.பி. 922). உதையசந்திரமங்கலத்தில் வாழ்ந்த பிராமணர்களுக்கு உதையசந்திரமங்கலம், கடைக்கோட்டூர் ஆகிய சிற்றூர்களை இணைத்து வீரநாராயணச்சேரி என்று பெயரிட்டு பிரமதாயமாக அளித்த செய்தியைக் கூறுவது இது. இவ்வாறு அளிக்க விண்ணப்பம் செய்தவன் கங்க மன்னனும் பராந்தக சோழனுக்கு கட்டுப்பட்ட அரசனுமான இரண்டாம் பிருதிவிபதி. பராந்தகன் அதை ஏற்று அதை நிறைவேற்றும் பொறுப்பைப் பிருதிவிபதியிடமே ஒப்படைத்தான். இச்செப்பேட்டில் சமஸ்கிருதப் பகுதியும் தமிழ்ப் பகுதியும் உள்ளன. சமஸ்கிருதப்பகுதியில் பராந்தகனின் முன்னோர் பற்றியும் பிருதிவிபதியின் முன்னோர் பற்றியும் புராண நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் கூறப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதியில் தான விவரங்கள் கூறப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதியில் உள்ள வடசொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

இராஜராஜ சோழனின் ஆனைமங்கலச் செப்பேடு[24] (கி.பி.1005) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. கடாரத்து அரசன் மாரவிஜயோத்துங்கவர்மனால் தமிழ்நாட்டு நாகைப்பட்டினத்தில் ஒரு பௌத்த விகாரம் கட்டப்பட்டு அவனது தந்தையான சூளாமணிவர்மன் பெயர் சூட்டப்பட்டது. அந்த விகாரத்துக்கு மன்னன் இராஜராஜன் ஆனைமங்கலம் என்ற சிற்றூரை தானமாகக் கொடுத்தான். அதைக் கூறும் செப்பேடு இது. வழக்கம் போல் இதுவும் சமஸ்கிருதம், தமிழ் என்ற இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. சமஸ்கிருதப்பகுதி இராஜராஜனின் முன்னோர்களைப் பற்றிப் புராண நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் கூறுகிறது. விஜயாலயன் முதல் ஆட்சிக்கு வந்த சோழர்களின் வரலாறு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதியில் தான நிலத்தைப் பற்றிய விரிவான தகவல்கள் உள்ளன. இது தொடர்பான அரச நடைமுறைகள், அவை செயல்படுத்தப்பட்ட நாள்கள், அவற்றைச் செயல்படுத்திய பல துறை அதிகாரிகள் பற்றிய விவரங்கள் முதலியவை மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இச்செப்பேட்டிலும் வழக்கம்போல் தமிழ்ப்பகுதியில் மிகப்பல வடசொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. உயர் அதிகாரிகளாக பிராமணர்கள், அரச குலத்தினர், வேளாளர்கள் ஆகியோர் இருந்ததை அறிய முடிகிறது. ஆணையிட்ட இராஜராஜன் இறந்துவிட்ட பிறகு அவன் மகன் இராஜேந்திரன் இந்த செப்பேட்டை வெளியிட்டான். பொதுவாக, செப்பேடுகள் ஒரு வளையத்தால் கோக்கப்பட்டு முத்திரை இடப்பட்டிருக்கும். முத்திரையில் ஒரு வடமொழி சுலோகம் பொறிக்கப்படுவது உண்டு. இந்தச் செப்பேட்டின் முத்திரையில் உள்ள வடமொழி சுலோகம் இராஜேந்திர சோழன் இச்செப்பேடு தந்ததைக் கூறுகிறது.

இராஜேந்திர சோழனின் கரந்தைச் செப்பேடு[25] (கி.பி.1020) 57 ஏடுகளைக் கொண்ட ஒரு பெரிய செப்பேடு ஆகும். மன்னன் 51 சிற்றூர்களை ஒன்று சேர்த்து தன் தாயின் பெயரால் ஒரு சதுர்வேதி மங்கலத்தை உருவாக்கி அதை 1080 பிராமணர்களுக்குப் பிரித்துக் கொடுத்ததைப் பற்றி இது கூறுகிறது. இச்செப்பேடும் முன் செப்பேட்டை ஒத்ததே. இது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிராமணர் பற்றிய விவரங்கள் கொண்ட பெரிய செப்பேடு என்பதால் பல நூற்றுக்கணக்கான வடமொழிச் சொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இராஜேந்திர சோழன் சிறுவனாக இருந்த போதே வேத. சாஸ்திரங்களை முழுமையாகக் கற்றதாக இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. இதில் இருந்து பிராமணர் மட்டுமின்றி அரச குலத்தினரும் வடமொழியில் தேர்ச்சி பெற்று வேத, சாஸ்திரங்களைக் கற்றதை அறியலாம். உயரிய விருதுகள் பெற்ற இருவர் இச்செப்பேட்டைச் செதுக்கியுள்ளனர். அவர்கள் சிற்ப ஆகம நூல்களில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

சேரர் செப்பேடுகள்:

ஆய்நாடு என்பது குமரிமுனையை ஒட்டிய பகுதி. அதற்கு மேல் மேற்குக்கடற்கரைப் பகுதியில் இருந்த நாடு வேணாடு. ஆய்நாடு சங்க காலத்தில் தனிச் சிற்றரசாக இருந்தது. பின்பு ஆய்நாட்டையும் வேணாட்டையும் இணைத்து அரசர்கள் ஆண்டனர். அத்தகைய ஒரு அரசனான ஆய்க்குல கோக்கருநந்தடக்கனின் பார்த்திவசேகரபுரச் செப்பேடு[26] கி.பி. 866 ல் எழுதப்பட்டது. அவன் குடிகளுக்கு வேறு நிலம் கொடுத்து அவர்கள் நிலத்தை வாங்கி திருமாலுக்கு ஒரு கோயில் கட்டினான். வேத பாடசாலையை அமைத்து பாடசாலை மாணவர், ஆசிரியர்களுக்கு உணவுக்கு தான ஏற்பாடு செய்து அந்த ஊருக்கு பார்த்திவசேகரபுரம் என்று பெயரிட்டான். இச்செப்பேட்டின் பின்பகுதியில் சிறிய சமஸ்கிருதப் பகுதி காணப்படுகிறது. தமிழ்ப் பகுதியில் சமஸ்கிருதச் சொற்கள் கிரந்தத்தில் எழுதப்பட்டும் தமிழில் எழுதப்பட்ட சில வடமொழிச்சொற்களில் வடமொழி ஒலிகள் மட்டும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டும் காணப்படுகின்றன.

கேரளாவில் வேணாட்டுப் பகுதிக்கு மேலே உள்ள நடுக்கேரளப் பகுதியில் இடைக்காலத்தில் ஆட்சி செய்தவர்கள் சேரமான் பெருமாள் அரசர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களில் பழைமையான அரசனாக அறியப்படுபவன் ஸ்தாணுரவி. அவன் ஆட்சியில் சிரியன் கத்தோலிக்க வணிகர்கள் கொல்லத்தில் குடியேறி அங்கு ஒரு தேவாலயம் (தரிஸாப்பள்ளி) அமைத்திருந்தனர். அதற்குக் கொடுக்கப்பட்ட தானத்தைப் பற்றி கி.பி 849 ல் எழுதப்பட்ட அவனது தமிழ்ச் செப்பேடு[27] கூறுகிறது. பிற செப்பேடுகளைப் போலவே இச்செப்பேட்டிலும் வடசொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

பிற்கால நிலை:

விஜயநகர ஆட்சிக்கால கல்வெட்டு:

தமிழகத்தில் சோழர் ஆட்சி பாண்டியரால் முடிவு பெற்றது. பிறகு பாண்டியர் ஆட்சி இஸ்லாமியரால் முடிவு பெற்றபின், இஸ்லாமியரை வென்று விஜயநகர ஆட்சி ஏற்பட்டது. அவர்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். வடமொழிக்கும், தெலுங்குக்கும் முதன்மை கொடுத்தவர்கள். ஏற்கனவே தமிழில் கலந்திருந்த வடமொழிக்கலப்பு இப்போது மிகவும் மிகுந்தது. கிருஷ்ணதேவராயர் சோழ நாட்டில் உள்ள ஆலயங்களுக்கு தானமளித்ததைப் பற்றிய ஒரு கல்வெட்டு[28] கடலூர் வட்டம் தீர்த்தனகிரியில் உள்ள சிவக்கொழுந்தீஸ்வரர் கோயிலில் உள்ளது. கி.பி.1517 ஐச் சேர்ந்த இக்கல்வெட்டு மிகப்பல வடசொற்களைக் கொண்டுள்ளது. அவை கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

சேதுபதி மன்னர் செப்பேடு:

திருவிதாங்கூர் மன்னரான பாலராமவர்மா குலசேகரப்பெருமாள், காக்கூர் என்ற கிராமத்தை 4000 வராகன் பணம் கொடுத்து சேதுபதி மன்னர் முத்துராமலிங்க ரகுநாதசேதுபதியிடம் இருந்து வாங்கி இராமேஸ்வரம் கோயிலுக்கு தானமாக அளித்தார். அதைக் கூறும் இச்செப்பேடு[29] கி.பி. 1769 ல் எழுதப்பட்டது. இக்காலத்தில் தமிழில் வடமொழிக் கலப்பு மிகவும் மிகுதி. இச்செப்பேட்டில் சமஸ்கிருதத் தனிப்பகுதி இல்லை. எனினும் தமிழில் அமைந்த இச்செப்பேட்டில் மிகப்பல வடமொழிச் சொற்கள் நிறைந்துள்ளன. அவை கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இதனால் வடமொழிச் சொற்களை கிரந்த எழுத்தில் எழுதும் வழக்கம் இக்காலம் வரை இருந்துள்ளதை அறிகிறோம்.

அறியும் முடிவுகள்:

மேலே கண்டவற்றில் இருந்து நாம் பின்வருவனவற்றை அறியலாம்:

தமிழில் எழுதும்போது இடையிடையே வடமொழிச்சொற்களை வடமொழி எழுத்துகளால் எழுதும் முறை பழங்காலம் முதல் இருந்துவந்துள்ளது (எ.கா: ஒரு வக்ஷிபறந்தது [வக்ஷி - பட்சி])

தமிழில் எழுதப்படும் வடமொழிச் சொற்களில் வடமொழிக்கே உரிய ஒலிகளை வடமொழி எழுத்துகளாலும் மற்ற எழுத்துகளை தமிழ் எழுத்துகளாலும் எழுதும் முறையும் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் காலம் முதல் இருந்துவருகிறது (எ.கா: ஹொபாலன் [கோபாலன்])

வடமொழிச் சொற்களைத் தமிழின் நடுவே எழுதுவது நான்கு வகைகளில் உள்ளது எனலாம். ராஜராஜன் என்பதை இவ்விதங்களில் எழுதுவதைக் காண்போம். 1. முழுச்

சொல்லையும் கிரந்த எழுத்தில் எழுதுதல் (எ.கா: ஸ்ரீஸ்ரீ) 2. வடமொழிச் சொல்லை கிரந்த எழுத்தில் எழுதி அதனுடன் இணைந்த தமிழ் ஒட்டுகளைத் தமிழில் எழுதல் (எ.கா: ஸ்ரீஸ்ரீனால்) 3. வடமொழிச்சொல்லைத் தமிழ் எழுத்துகளில் எழுதி நடுவில் உள்ள வடமொழி ஒலிக்கு மட்டும் கிரந்த எழுத்தைப் பயன்படுத்துதல் (எ.கா: ராஜராஜன்) 4. தொல்காப்பிய விதிப்படி வடமொழிச் சொல்லைத் தமிழுக்கேற்றபடி மாற்றி தமிழ் எழுத்துகளால் எழுதல். தமிழில் நன்கு பயின்று தமிழ்ச்சொல் போல மாறிய சொற்களுக்கு மட்டுமே இம்முறை சில இடங்களில் பின்பற்றப்பட்டது. (எ.கா: இராசராசன்).

பல்லவ, பாண்டிய, சோழ, சேர நாடுகளிலும் கர்நாடகா, ஆந்திரா, இலங்கை போன்ற இடங்களிலும் இம்முறைகள் ஒரே சீராகக் கடைப்பிடிக்கப்பட்டன.

இத்தகைய முறைகள் தொடக்ககால கல்வெட்டுகள், செப்பேடுகள் முதல் சேதுபதி மன்னர் காலம் வரை – அதாவது ஆங்கிலேயர் காலத்துக்கு முன்வரை ஒரே சீராக இருந்துவந்துள்ளன.

தமிழில் வடமொழிச்சொற்களைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்படவில்லை. வடமொழிச் சொற்களை மொழிபெயர்க்காமல் அப்படியே பயன்படுத்தும் போக்கு மிகுதியாக இருந்தது. வடமொழிச் சொற்களைத் தமிழுக்கு ஏற்ப மாற்றும்படி கூறும் தொல்காப்பிய விதியைப் பின்பற்றுதல் மிகக் குறைவாகவே இருந்தது.

பிராமணர் அல்லாத கொல்லர் போன்றவர்களும் வடமொழியில் நன்கு தேர்ச்சி பெற்று வடமொழியில் எழுதும் திறனைப் பெற்றிருந்தனர். அவர்கள் வடமொழியில் இருக்கக் கூடிய சிற்ப ஆகமம் போன்ற நூல்களில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

அரச குலத்தினரும் வடமொழியில் உள்ள வேத சாஸ்திரங்களைக் கற்று தேர்ச்சி பெற்றனர்.

பொதுமக்கள் படிப்பதற்குரிய கல்வெட்டுகள், செப்பேடுகளில் இப்படிப் பல வடசொற்கள் வடமொழி எழுத்தில் எழுதப்பட்டதால் பொது மக்கள் அப்போது போதுமான வடமொழி அறிவு பெற்றிருந்தனர் என்று அறிகிறோம். தற்காலத்தில் மக்கள் தமிழுடன் ஆங்கிலத்தையும் நன்கு கற்று பயன்படுத்துதல் போல முன்பு தமிழ் மக்கள் தமிழுடன் சமஸ்கிருதமும் கற்று பயன்படுத்தினர் என்பதை அறிகிறோம்.

தமிழர்கள் இக்காலத்தில் ஆங்கிலத்தைப் விரும்பிப் பயன்படுத்துவது போல் அக்காலத்தில் சமஸ்கிருதத்தைத் விரும்பிப் பயன்படுத்தினர். சமஸ்கிருதத்தின் மேல் வெறுப்போ, பகையோ, அன்னியமாகக் கருதும் தன்மையோ சிறிதும் இல்லை. இந்த நிலையே வரலாறு நெடுகிலும் இருந்தது.

சமஸ்கிருதச் செல்வாக்குக்குக் காரணம்:

இந்த அளவுக்கு சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழகத்தில் ஏற்பட்டது எப்படி என்பது ஆராயத்தக்கது. தமிழகத்துக்கும் இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கும் பழங்காலம் முதல் நெருங்கிய தொடர்பு இருந்தது. தமிழ்நாடு ஒருபோதும் தனித்தீவாக இருந்தது இல்லை. வடநாட்டுப் பொருள்கள் தமிழ்நாட்டிலும் தமிழ்நாட்டுப் பொருள்கள் வடநாட்டிலும் வாணிபம் செய்யப்பட்டன. தமிழ்நாட்டு அரசர்களுக்கும் வடநாட்டு அரசர்களுக்கும் இருந்த தொடர்பு பற்றி வடமொழியிலும் தமிழிலும் பற்பல சான்றுகள் உள்ளன. சமஸ்கிருதம் நீண்ட காலத்துக்கு முன்பே மக்களின் பேச்சுவழக்கில் மறைந்துவிட்ட போதிலும் அது ஆங்கிலேயர் வருவதற்கு முன்புவரை இந்நாட்டில் எழுத்துமொழியாகச் சிறந்திருந்தது. அக்காலத்தில் சமஸ்கிருதம் பாரதத்தின் பொதுமொழி போலவும், இணைப்புமொழியாகவும் (*Lingua franca*) இருந்தது. சமயத்துறைக்கு மூலமாக வடமொழி வேதங்களே இருந்தமையால் அத்துறையில் ஈடுபடுவோர் வடமொழி கற்கவேண்டியது மிகவும் தேவையாக இருந்தது. அறிஞர்களின் மொழியாகவும் அது இருந்தது. பாரதம் முழுவதும் இருந்து தோன்றிய பலதுறை நூல்களும் வடமொழியிலேயே எழுதப்பட்டன. இன்று ஆங்கிலத்தில் எழுதினால் உலகம் முழுவதும் அதைப் படிக்க முடியும் என்றுள்ள நிலை போல அப்போது வடமொழியில் எழுதினால் அதை பாரதம் முழுவதும் இருந்த அறிஞர்களால் படிக்க முடியும் என்ற நிலை இருந்தது. வடமொழி கற்றவரே பல விதக் கலைகளையும் எளிதாகக் கற்க முடிந்தது. ஏனென்றால் மூலநூல்கள் எல்லாம் வடமொழியிலேயே இருந்தன.

தமிழின் முதல் இலக்கண நூலாகக் கருதப்படும் அகத்தியத்தின் சூத்திரங்கள் என உரையாசிரியர்கள் காட்டும் பாடல்களில் வடசொற்கள் கலந்துள்ளன. அகத்தியத்துக்குப் பின் தோன்றிய பேரிலணக்கண நூலான தொல்காப்பியத்தில் பல வடசொற்கள் உள்ளன. வடமொழிச் சொற்களை தமிழில் எழுதுவதற்கு தொல்காப்பியர் விதி வகுத்துள்ளார்.

சங்க காலத் தமிழர் வடமொழி வேதங்களை நன்கு அறிந்திருந்தனர். வேதங்கள் மிகவும் உயர்வாகப் போற்றப்பட்டன. வேதம் கற்று வேள்விகள் செய்யும் பிராமணர் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டனர். மன்னர்களும் மக்களும் வேள்விகள் பல செய்தனர். சிவன், திருமால், முருகன், கொற்றவை முதலிய தெய்வங்களுக்கு எங்கும் கோயில்கள் இருந்தன. கோவில்களில் அன்றாட வழிபாடுகளும் திருவிழாக்களும் நடைபெற்றன. வடமொழிப் புராணக் கருத்துகள் நன்கு அறியப்பட்டு இருந்தன. 'சங்க காலத் தமிழரின் சமயநிலை' என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய ஒரு கட்டுரையில்[30] இவை உரிய சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையால் வைதிகமும் வடசொற்களும் தமிழகத்தில் நன்கு பரவியிருந்தன.

தமிழ் மன்னர்கள் பலர் சங்க காலம் தொட்டு வடநாடுகளுக்குப் படையெடுத்துச் சென்று வென்றார்கள். பிற்காலச் சோழர்களின் அரசு ஆந்திரா, கர்நாடகா, இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவி இருந்தது. பலவித மக்களின் தொடர்புக்கு சமஸ்கிருதமே பயன்பட்டது. பாண்டியர்களின் காசுகளில் தமிழ் எழுதப்பட்டுள்ளது. ஆனால் சோழர்களில் பராந்தகன், உத்தமசோழன், இராஜராஜன், இராஜேந்திரன் முதலியோரின் காசுகளில் சிலவற்றில் கிரந்தமும் சிலவற்றில் தேவநாகரியுமே எழுதப்பட்டுள்ளன. முதலாம் குலோத்துங்கன் காசுகளில்தான் முதல்முதலில் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்று 'தமிழர் காசு இயல்' என்ற நூலில் திரு. நடன. காசிநாதன் குறிப்பிடுகிறார்[31]. இது அக்கால நிலையைக் காட்டும். இத்தகைய சூழ்நிலைகளால் சமஸ்கிருதம் தமிழ்நாட்டில் வரலாறு நெடுகிலும் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. தமிழர்கள் தமிழுடன் வடமொழியையும் கற்றனர்; வடமொழியைப் பெரிதும் மதித்துப் போற்றினர் என அறிகிறோம்.. ஆங்கிலேயர் வந்தபிறகு இந்நிலை முற்றிலும் மாறியது. சமஸ்கிருதத்தின் இடத்தை ஆங்கிலம் பிடித்துக்கொண்டது. சமயத்துறையில் மட்டுமே இப்போது சமஸ்கிருதத்தின் செல்வாக்கு குறையாமல் நிலவுகிறது. சமஸ்கிருதத்தை எழுத ஆங்கிலேயர் தேவநாகரி எழுத்தையே பயன்படுத்தினர். அதனால் தற்காலத்தில் சமஸ்கிருத நூல்களும் தேவநாகரி எழுத்திலேயே வெளிவருகின்றன. கிரந்த எழுத்தின் பயன்பாடு இப்போது மிகவும் குறைந்து, கிரந்தத்தைப் படிக்கத் தெரிந்தோர் மிகவும் அருகிவிட்டனர்.

வடமொழிக்கலப்பால் தமிழ் சீர்குலைந்தமை:

எந்த ஒரு சமுதாயமும் தன்னைச் சுற்றியுள்ள பிற சமுதாயங்களின் தொடர்பின்றி வாழ முடியாது. அப்போது பிற சமுதாயங்களின் பண்பாடு, மொழி ஆகியவற்றின் தாக்கம் ஏற்படவே செய்யும். அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும் அதே நேரத்தில் அவற்றால் தம் தாய்மொழி பாதிக்கப்படாமல் காப்பாற்றிக்கொள்வது மிகவும் அடிப்படையான ஒரு தேவை. கடந்த காலங்களில் வடமொழியைத் தமிழர்கள் பயன்படுத்திக்கொண்டது இயல்பானது; அதில் தவறில்லை. எனினும் தமிழின் தூய்மையைப் பாதுகாக்கத் தவறியதே தமிழுக்கு ஏற்பட்ட கேடாகும். தற்காலத்தில் நாம் ஆங்கிலத்தைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஆங்கிலத்தால் தமிழின் தூய்மை கெட்டுவிடாமல் பாதுகாப்பது மிகவும் தேவை. இது போன்றதே கடந்த கால நிலையும். தமிழில் பேச்சுவழக்கில் வடமொழி கட்டுப்பாடின்றிக் கலந்த நிலையைக் கல்வெட்டு, செப்பேடுகளில் காண்கிறோம். அது போல் அல்லாமல் எழுத்துவழக்கில் புலவர்கள் வடமொழியை மிகக் கட்டுப்பாட்டுடன் கையாண்டனர். சங்க காலத்தில் முடிந்தவரை வடசொற்களை மொழிபெயர்த்துப் பயன்படுத்தினர். எனினும் அவ்வாறு மொழிபெயர்க்காமல் பயன்படுத்துவது காலப்போக்கில் பெருகிவந்தது. தொல்காப்பியம், சங்க நூல்கள்,

திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பக்தி இலக்கியம் ஆகியவற்றுள் முன்னதைவிடப் பின்னதில் வடசொற்கலப்பு மிகுதியாக இருப்பதைக் காணலாம். சங்க காலப் பாண்டியர் சங்கம் வைத்து தமிழை ஆராய்ந்து தமிழின் தூய்மையைக் காத்தனர். களப்பிரர் காலச் சீர்குலைவுக்குப் பின் பிற்கால மன்னர்கள் அரசியல் நடவடிக்கைகளில் பெரும் கவனம் செலுத்தினார்களே தவிர தமிழ் மேல் பெரிதாகக் கவனம் செலுத்தவில்லை. இன்று ஆங்கிலம் பேசினால்தான் மதிப்பு என்று கருதுவதைப் போல் அப்போது சமஸ்கிருதம் பேசினால்தான் மதிப்பு என்று கருதியவர் பலர். இவ்வாறு காலந்தோறும் மிகுதியாகி வந்த வடமொழிக் கலப்பால் தமிழ் தன் தூய்மையை இழந்தது. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்நிலை உச்சத்தைத் தொட்டது. தமிழ் மிகவும் சீர்குலைந்தது. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தனித்தமிழியக்கம் தோன்றி தமிழைத் தூய்மைப்படுத்திய பின் தற்காலத்தில் தமிழில் வடசொற்கலப்பு பெரிதும் குறைந்துவிட்டது. எனினும் இன்னும் குறைக்க இடம் உள்ளது. மொழியின் தூய்மை கெடுவதால் ஏற்படக் கூடிய விளைவுகளை நாம் மலையாளத்தைக் கொண்டு அறியலாம்.

மலையாளத்தின் பிரிவு:

கேரள நாடு முன்பு தமிழ்நாட்டின் பகுதியாக இருந்த சேரநாடாகும். அங்கு தமிழே பேசப்பட்டது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பேச்சுவழக்கு ஒவ்வொரு விதமாக இருப்பதைப் போல சேரநாட்டுப் பேச்சுவழக்கும் ஒருவிதமாக இருந்தது. 10 ஆம் நூற்றாண்டு அளவில் அத்தகைய பேச்சுவழக்கிலேயே எழுதும் வழக்கம் பெருகி அங்கிருந்த தமிழ் வேறுபடத் தொடங்கியது. மேலும் சமஸ்கிருதக் கலப்பும் மிகுதியாகியது. வட்டெழுத்தில் எழுதப்பட்டு வந்த சேரநாட்டுத் தமிழுக்கு, சமஸ்கிருதத்தை மிகுதியாகக் கொண்ட மணிப்பிரவாள நடையை எழுதும் வசதிக்காக, கிரந்த எழுத்துகளை அடிப்படையாகக் கொண்ட புதிய மளையாள எழுத்து உருவாகியது. விளைவாக, சேரநாட்டுத் தமிழ், தமிழில் இருந்து துண்டிக்கப்பட்டு மலையாளம் என்ற புது மொழி ஆகியது. மொழி மட்டும் பிரியவில்லை. அந்த மக்களினம், நாடு எல்லாம் தமிழகத்தில் இருந்து பிரிந்துவிட்டன. அதுவரை சேரநாட்டில் எழுதப்பட்ட நூல்கள் அவர்களால் படிக்க முடியாதவையாக மாறி காலப்போக்கில் மறைந்துவிட்டன. மொழித்தூய்மையைப் பாதுகாக்காவிட்டால் மொழி மட்டுமல்லாமல் மக்களினம், நாடு, மரபு எல்லாமே சிதைந்து போய்விடும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இவ்வாறு பேச்சு வழக்கையே எழுதத் தொடங்கியதால்தான் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளும் தமிழில் இருந்து பிரிந்தன என்பதை அறிய முடிகிறது.

மொழிகள் சீர்குலைதலும் தமிழின் சீரிளமையும்:

இளைய மொழிகளில் பேசப்படும் மொழிக்கும் எழுதப்படும் மொழிக்கும்

பெரிய வேறுபாடு இருப்பதில்லை. ஆனால் தொன்மையான தமிழ் மொழியில் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் பெரும் வேறுபாடு உண்டு. 'கேட்க வேண்டும்' என்பது இயற்றமிழ். அது பேச்சு வழக்கில் 'கேக்கணும்' என்று பேசப்படுகிறது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பழக்கத்தின் காரணமாக இந்த வேறுபாட்டைப் பெரிதாக உணர்வதில்லை. புதிதாகத் தமிழை அறிபவர்களுக்கு இவை இரண்டும் வெவ்வேறு மொழிகள் போலவே தோன்றும். மொழிக்குரிய இயற்கையான சொற்கள் மக்கள் பேச்சில் திரிபடைதல் இயல்பானது. தமிழில் எழுதும்போது திரிந்த கொச்சைச் சொற்களை எழுதாமல் இயற்றமிழ்ச் சொற்களையே எழுதுதல் தமிழில் பண்டு தொட்டு வழக்கம். இது 'எழுத்து வழக்கு' எனப்படும். முற்காலம் முதல் தமிழில் நூல்கள் செய்யுளால் எழுதப்பட்டன. அவை செம்மையான இயற்றமிழில் எழுதப்பட்டன. வடமொழிச்சொற்களைப் பயன்படுத்தும்போது தொல்காப்பிய விதிப்படி தகுந்த தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்தி வட எழுத்துக்களைத் தவிர்ப்பதைச் செய்யுள் மரபில் புலவர்கள் உறுதியாகக் கடைப்பிடித்தனர். ஆனால் பொதுமக்கள் பேசுவதிலும், எழுதுவதிலும் இது கடைபிடிக்கப்படவில்லை. பேச்சுவழக்கு என்பது திரிந்து கொண்டே போகும் இயல்புடையது. வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு காலங்களிலும் வெவ்வேறு மாதிரியாகத் திரியும். ஆனால் எழுத்துவழக்கு ஒரே மாதிரியாக இருக்கும்; அதில் மாற்றங்கள் மிகவும் குறைவு. 2500 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழ்ப் புலவர்கள் எழுத்துவழக்கை ஏறத்தாழ ஒரே சீராகக் காப்பாற்றி வருகிறார்கள். தமிழின் சீரிளமைத் திறத்துக்கு இதுவே காரணம். புலவர்கள் இவ்வாறு செய்திராவிட்டால் தமிழ் மேலும்மேலும் திரிபடைந்து ஒரு காலத்தில் இருந்த தமிழ் பிற்காலத்தவருக்கு எதுவுமே புரியாமல் போய்விடும். அதாவது தமிழ் அழிந்து ஒரு புதிய மொழி தோன்றிவிடும். தமிழில் உள்ள நூல்கள் படிக்க முடியாதவையாக மாறி அழிந்துவிடும். பல இளைய மொழிகள் இப்படிப் பழைய வடிவம் அழிந்து புதிதாக உருவானவைதான். தமிழோ எழுத்துவழக்கைக் காப்பாற்றி வருவதால் இன்றும் பழமையும் இளமையும் கொண்டு வாழ்கிறது. இடையில் ஏற்பட்ட வடமொழிக் கலப்பில் இருந்தும் தற்போது தமிழ் பெரிதும் மீண்டுவிட்டது.

தற்காலத்தில் சமஸ்கிருதம் பற்றிய நோக்கு:

சிலர் வடமொழியால் தமிழ் சீர்கெட்டது என்று வடமொழி மேல் வெறுப்பு கொள்வர். வடமொழியை மிகவும் இழித்துப் பேசி மகிழ்ச்சி அடைவர். சமஸ்கிருதம் உலக அரங்கில் பெரிதும் மதிக்கப்படும் பழைமையான ஒரு செம்மொழி. இந்தியாவின் பல ஆயிரம் ஆண்டுப் பண்பாட்டு வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது. இந்த நாட்டின் அறிவுத் துறை நூல்கள் பெரிதும் அதிலேயே உள்ளன. இன்று ஆங்கிலத்தால் தமிழ் கெடுவதற்கு ஆங்கிலமோ, ஆங்கிலேயர்களோ எப்படிக் காரணம் இல்லையோ, அதுபோலவே தமிழின் சீர்கேட்டுக்கு சமஸ்கிருதம் காரணம் அல்ல. தமிழின்

தூய்மையை நாம் பாதுகாக்கத் தவறியமையே காரணம். வடமொழியைக் கடந்த காலத்தில் பயன்படுத்திக்கொண்டு தற்போது அதை இழித்தும், வெறுத்தும் பேசுவது சரியல்ல. நம் தாய்மொழி மேல் கொண்ட பற்றின் காரணமாக பிற மொழிகளை வெறுப்பதும் சரியல்ல.

தற்காலத்தமிழில் ஆங்கிலம்:

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டவுடன் அதுவரைக் கோலோச்சிக் கொண்டிருந்த சமஸ்கிருதத்தின் இடத்தை ஆங்கிலம் பிடித்துக் கொண்டது. சமஸ்கிருதக் கலப்பு நீங்கினாலும் ஆங்கிலக் கலப்பு தமிழை அழிக்கும் அளவுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாகி உள்ளது. இக்காலத்தில் கிராமத்துப் பெண்கள் வெளியிடும் சமையல் காணொளிகளில் கூட வெங்காயம், மிளகுத்தூள், எலுமிச்சை, கோழி போன்ற தமிழ்ச் சொற்களைக் கூறாமல் ஆனியன், பெப்பர், லெமன், சிக்கன் என்ற ஆங்கிலச் சொற்களைக் கூறும் அவல நிலையைக் காண்கிறோம். தமிழைக் காப்பூற்றிவந்த செய்யுள் இலக்கியம் இன்று ஏறத்தாழ மறைந்துவிட்டது. உரைநடையில் உள்ள பல துறை நூல்களும் கட்டுரைகளும் மட்டுமே இயற்றமிழில் அமைந்துள்ளன. இப்போது சமூக ஊடகங்கள் மிகுதியாகிவிட்டன. கொச்சையான பேச்சுவழக்கிலும், ஆங்கிலம் பெரிதும் கலந்த தமிழிலும் எழுதுவது அவற்றில் மிகவும் பெருகி உள்ளது. இளைஞர்கள் இன்று நல்ல தமிழ் பேசவும் தெரியாமல், எழுதவும் தெரியாமல் தமிழுடன் தொடர்பற்ற அன்னியர் போல மாறியுள்ள அவலநிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் எழுத்துகளில் எழுதக்கூட முடியாமல் ஆங்கில எழுத்துகளில் எழுதுகின்றனர். இந்நிலை, 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற வரியை நினைவுபடுத்துகிறது. எழுதப்படும் தமிழில் செம்மையான இயற்றமிழைக் கடைப்பிடிப்பதே தமிழை அழியாமல் காக்கும் வழியாகும். அதே சமயம் தற்காலத்தில் பல துறை அறிவும் தமிழில் இடம்பெறும் நிலையில் தொல்காப்பிய விதியைச் சற்றுத் தளர்த்திப் பிறமொழிச் சொற்களை எழுதலாம்.

முடிவுரை:

மேலே கண்டவற்றின் சுருக்கமாக இவ்வாறு கூறலாம். ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு மேலாக தமிழில் வடமொழிக்கலப்பு இருந்து வந்துள்ளது. தமிழர்கள் பாரதத்தின் மற்ற மக்களுடன் தொடர்பு கொள்ளவும் அறிவுத்துறைகளைப் பகிர்ந்து கொள்ளவும் சமஸ்கிருதமே பயன்பட்டது. தமிழர்கள் வடமொழிக்கு மிகுந்த மதிப்பு கொடுத்துக் கற்றும், பயன்படுத்தியும் வந்தனர். ஆங்கிலம் வந்தபிறகு அந்நிலை முற்றிலும் மாறிப்போய் சமஸ்கிருதத்தின் தேவை அடியோடு குறைந்துபோய்விட்டது. கடந்த காலத்தில் அதை மிகவும் பயன்படுத்திக்கொண்டு இப்போது அதை இழிவுபடுத்திப் பேசுவதும், உயர்வான அம்மொழியின் சிறப்பைக் கருதாமல் தாழ்த்திப் பேசுவதும் சரியல்ல. சமுதாய நலனுக்காக பிற மொழிகளை நாம் பயன்படுத்திக் கொண்டாலும் நம்

தாய்மொழியின் தூய்மையைக் காப்பாற்ற வேண்டியது நமது பொறுப்பும் கடைமையும் ஆகும். கடந்த காலங்களில் நாம் இதைச் சரிவரச் செய்யவில்லை என்றே கருதவேண்டி உள்ளது. அதைப் போன்ற மோசமான ஒரு நிலை தற்போது ஆங்கிலத்தால் தமிழுக்கு ஏற்பட்டுள்ளது. வரலாற்றில் இருந்து பாடம் கற்று, இந்த அச்சுறுத்தலில் இருந்து தமிழைக் காக்க உரிய நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியது இன்றைய நிலையில் நமது தலையாய கடமையாகும். எழுதும் தமிழில் பேச்சுவழக்கைக் கலக்காமல் செம்மையான இயற்றமிழைப் பின்பற்றுவதன் தேவையை அனைவரும் உணரச்செய்தல் இன்றைய நிலையில் மிகவும் வேண்டுவதாகும்.

மேற்கோள்கள்:

1.தமிழ் பிராமிக் கல்வெட்டுகள், 2006, பக். 114 – 121, 134, 140.

2. தமிழ் பிராமிக் கல்வெட்டுகள், 2006, பக். 115, 119 – 121, 134, 140.

3. *Epigraphia Indica Vol. XII, No. 27.*

4. *South Indian Inscriptions Vol.4, No 135.*

5. *Epigraphia Indica Vol. 38 No.4.*

6. *South Indian Inscriptions Vol.V No. 405*

7. *Epigraphia Indica Vol. VIII No.33.*

8. *Select Inscriptions of Tamilnadu No. II: 5*

9. *South Indian Inscriptions Vol. 5 No. 768*

10. *South Indian Inscriptions Vol. 7 No. 56*

11. *Epigraphia Indica Vol. 5 No.6.*

12. *South Indian Inscriptions Vol. 3 No. 15-18.*

13. *Epigraphia Indica Vol. 18 No.4.*

14. *Select Inscriptions of Tamilnadu No.III: 2*

15. *Select Inscriptions of Tamilnadu No.III: 6*

16. *South Indian Inscriptions Vol. 6 No. 456*

17. *Travancore Archeological Series Vol 2 Part 1 No.7. I*

18. *Epigraphia Indica Vol. 7 No.14.*

19. *South Indian Inscriptions Vol. 4 No. 1396.*

20. பல்லவர் செப்பேடுகள் முப்பது, 1999, பக்.1

21. பாண்டியர் செப்பேடுகள் பத்து,1999, பக். 1

22 பாண்டியர் செப்பேடுகள் பத்து,1999, பக். 83.

23. சோழர் செப்பேடுகள்,2013. பக். 195.

24. சோழர் செப்பேடுகள், 2013. பக்.365.

25. சோழர் செப்பேடுகள்,2013. பக். 543.

26. *Travancore Archeological Series Vol 1 No.I.1*

27. *Travancore Archeological Series Vol II Part 1 No.9. 1*

28. *South Indian Inscriptions Vol. 17 No.145.*

29. *Travancore Archeological Series Vol 5 Part 1 No.4.*

30. கருத்தரங்க மலர் – 11.12.2024, ஜமால் முகமது கல்லூரி, பக். 91.

31. காசிநாதன், நடன. தமிழர் காசு இயல்,1995, பக்.62.

துணை நூல் பட்டியல்:

1. *Archeological Survey of India, Epigraphia Indica Series.*
2. *Archeological Survey of India, South Indian Inscriptions Series.*
3. *Sridhar, T. S. & Marxia Gandhi, N., Select Inscriptions of Tamilnadu, Dept.of Archaeology. Govt of Tamilnadu, Chennai, 2006.*
4. தமிழ் பிராமிக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2006.
5. பல்லவர் செப்பேடுகள் முப்பது, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.
6. பாண்டியர் செப்பேடுகள் பத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999
7. மகாதேவன், வே. சோழர் செப்பேடுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2013.
8. *Travancore Archeological Series Vol I, Govt of Kerala, 1988 (Reprint).*
9. *Travancore Archeological Series Vol II, Govt of Kerala, 1919.*
10. *Epigraphia Carnatica – Vol. 9 (1905) & Vol 12 (1904), Mysore Government Central Press, Bangalore.*
11. *A collection of the Inscriptions on copper plates and stones in the Nellore district Part 1,2 & 3, Asian Educational Services, New Delhi, 1990 (Reprint).*
12. கருத்தரங்க மலர் - 11.12.2024, Vol.1, P-ISSN: 2454-3993, ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி.
13. காசிநாதன், நடன. தமிழர் காசு இயல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995.